# சட்டப்பூர்வ உரிமைகள் குறித்த பிரகடனம்

## விசாரணை செய்யப்படுகிறதோர் சுதந்திரமான நபருக்கு வழங்குவதற்கானது

**(பொதுவானபடிவம்)**

**நீங்கள் புரிந்து கொள்கிறதோர் மொழியிலேயே பின்வரும் தகவல்களை உங்களுக்குக் கொடுத்தாக வேண்டும்.**

நீங்கள் ஓர் குற்றத்தைச் செய்திருக்கிறீர்கள் அல்லது செய்ய முயற்சித்திருக்கிறீர்கள் என்பதாக உங்களைச் சந்தேகப்படுவதற்கான, உங்களுக்கு எதிரான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எளிதில் நம்பத்தகுந்த காரணங்கள் இருக்கின்றன என்பதால் தான் உங்களை விசாரிக்கிறார்கள் என்பது இதன் மூலமாக உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது

உங்கள் மீது குற்றம் சுமத்துகிற அந்தக் குற்றச் செயலின் தன்மை, அதனைச் செய்த தேதி மற்றும் இடத்தைத் தெரிந்து கொள்வதற்கான உரிமை உங்களுக்குள்ளது.

நீங்கள் எந்த நேரத்திலும் உங்களை விசாரணை செய்கிற இடத்திலிருந்து சென்றுவிடுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது.

**உங்களுக்குப் பின்வருபவற்றுக்கான உரிமை உள்ளது என்பதாக உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தெரிவிக்கப்படுகிறது:**

**அறிக்கை ஒன்றை விடுப்பதற்கோ, கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கோ அல்லது அமைதியாக இருந்து விடுவதற்கோ**

அவ்விசாரணைகளின் போது, உங்களது அடையாளத்தை நீங்கள் வெளிச்சொன்ன பிறகு, நீங்கள் பின்வருவனவற்றைத் தேர்ந்தெடுக்கலாம்:

- பிரகடனங்களைச் செய்வது
- கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பது
- அமைதியாக இருந்து விடுவது.

**வழக்கறிஞர் ஒருவர் உதவி பெறுவதற்கு**

உங்களை விசாரணை செய்கிற குற்றச் செயலானது, ஓர் கொடுங் குற்றமாக இருந்தாலோ அல்லது அது சிறைதண்டனை விதிக்கத்தக்கதோர் சாதாரணக் குற்றச் செயலாக இருந்தாலோ, நீங்கள் விசாரணையின் போது அல்லது எதிர்வாதம் செய்யும் போது நீங்கள் வழக்கறிஞரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

- **<u>வழக்கறிஞரைத் தெரிவு செய்தல்</u>**

நீங்கள் தெரிந்தெடுக்கிற வழக்கறிஞர் ஒருவரிடமிருந்து சட்டப்பூர்வ உதவியை வேண்டிப் பெறுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. வழக்கறிஞர் ஒருவரின் விவரங்களை உங்களால் வழங்க இயலவில்லை என்றாலோ, அல்லது நீங்கள் தேர்ந்தெடுத்த வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றாலோ, வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் நியமிக்கவுள்ள, அரசு நியமித்துள்ள வழக்கறிஞர் ஒருவரை உதவிக்கு அமர்த்திக் கொள்ள நீங்கள் கேட்டுப் பெறலாம்.

நீங்கள் பெற்றிருக்கும் கடிதத்தோடு இணைந்து வந்திருக்கும் ஆவணத்தில் சொல்லியுள்ளபடி, சட்ட உதவி பெறுவதற்கான தேவைகளை நீங்கள் சந்தித்தால் ஒழிய, வழக்கறிஞருக்கு ஆகும் அனைத்துச் செலவுகளையும் நீங்களே செலவழிக்க வேண்டும்.

- **<u>வழக்கறிஞரின் உதவி</u>**

உங்கள் வழக்கறிஞரால் பின்வருவனவற்றை செய்ய இயலும்:

- உங்களிடம் செய்கிற ஆலோசனையை இரகசியமாக வைத்துக் கொள்வதாக உத்திரவாதமளிக்கிற நிபந்தனைகளில் உங்களோடு ஆலோசனை செய்வது;

- மேலும் உங்களது விசாரணைகளிலும், எதிர் வாதங்களிலும் உங்களுக்கு உதவி செய்வது.

உங்களது வழக்கறிஞர் உடன் இல்லாமலேயே விசாரணையைத் தொடர்வதற்கும் நீங்கள் சம்மதிக்கலாம்.

**மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவி பெறுவதற்கு**

நீங்கள் பிரெஞ்சு மொழி பேசுவதில்லை என்றாலோ அல்லது அதனைப் புரிந்து கொள்வதில்லை என்றாலோ, விசாரணையின் போது அல்லது எதிர்வாதத்தின் போது அல்லது உங்கள் வழக்கறிஞரோடு தகவல் தொடர்பு கொள்ளும் போது மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியை, கட்டணமில்லாமல் வேண்டிப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உங்களுக்குள்ளது.

**உங்கள் கோப்பில் உள்ள ஒருசில பகுதிகளை அணுகிப் பார்ப்பதற்கு**

உங்களது வேண்டுகோளின் பேரில் அல்லது உங்கள் வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில், உங்களது விசாரணைகள் அல்லது எதிர்வாதத்தினைத் தொடர்ந்து எடுத்த அறிக்கைகளை மறுஆய்வு செய்து பார்க்க வேண்டுமென நீங்கள் கேட்கலாம்

**சட்ட ஆலோசனையிலிருந்து கிடைக்கிற பலன்**

வழக்கையில் இருக்கும் போது, சட்டத்திற்கும், நீதிக்கும் அணுகலை ஏற்படுத்தி தருகிறதோர் ஸ்தாபனத்தில் இருந்து கிடைக்கிற சட்ட ஆலோசனையிலிருந்து, கட்டணமில்லாமல் நீங்கள் பலன் பெறலாம், அது குறித்த தொடர்பு விவரங்கள் இத்துடன் இணைந்து வருகிற ஆவணத்தில் உங்களுக்குக் கொடுக்கப்படும்.